மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்

அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையினர் குழுவிற்கு 13 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 221 (1) வது விதியின் கீழ் 1973-74-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

3. அறிவிப்புகள்

(அ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : "ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (ஹவுஸ் கமிட்டி) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17—3—1973-ம் நாள், சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 19—3—1973-ம் நாள், திங்கட்கிழமை முற் பகல் 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்

கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 20—3—1973-ம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது பதின்மூன்றுக்கு மேற்படின் 22—3—1973-ம் நாள், வியாழக்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (பழைய உறுப்பினர்கள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்".

4 நடைமுறைக் கேள்விகள்

(அ) முன் வரிசையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் இருவருக்கு இடம் ஒதுக்கியிருப்பது குறித்து

திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 62-வது விதியின்கீழ் நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். முன்னாள் பேரவைத் தலைவராக இருந்த திரு. கே. எ. மதியழகன் அவர்களுக்கு பேரவையின் முன் வரிசையில் 190-எ இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் பெருவாரியாக உள்ள எதிர்க்கட்சிகளுக்குத்தான் இப்படி முன் வரிசையில் இடம் ஒதுக்கப்படும். இன்றையதினம் அண்ணா தி.மு.க.வில் 10 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த சிறிய கட்சிக்கு முன்வரிசையில் இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் முஸ்லீம் லீக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளுக்கும் — தலைவருக்கும், உப தலைவருக்கும் இப்படி முன் வரிசையில் இடம் ஒதுக்கப்படுவதாக இருந்தால் இப்போது இருக்கின்ற இடம் போதாது. இந்த நேரத்தில் திரு. கே. எ. மதியழகன் அவர்கள் அந்தக் கட்சியின் தலைவரா அல்லது உப தலைவரா என்பதுகூட நமக்குத் தெரியாது. அப்படி இருக்கும் போது அவருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கியிருப்பது சரியா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பேரவையில் முன்னாள் தலைவராக இருந்த திரு. கே. எ. மதியழகன் அவர்கள் கைப்பட எழுதியக் கடிதம் எனக்கு கிடைத்திருக்கிறது. இப்போது